# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119
இதழ்: 04

26—02—1993
விலை ரூபா 3-50


பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
2-3-1993
யாழ்ப்பாணம்


## தவக்கால நோன்பு நாட்கள்

ஒருசந்தி —(18 வயதுக்கும் 60 வயதுக்கும் உட்பட்டோர்)
திருநீற்றுப் புதனும் — பெரிய வெள்ளியும்
சுத்தபோசனம் (14 வயதுக்கு மேற்பட்டோர்)
ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் திருநீற்று புதன் அன்றும்

* கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் *

### திருப்பீடத் தூதுவர் வத்திக்கான் வானொலிக்குப் பேட்டி

# யாழ் குடாநாட்டு மக்கள் சத்துணவின்றி பெரிதும் துன்புறுகின்றனர்



ஸ்ரீலங்காவின் 10 வருட உள்நாட்டுச் சண்டையினால் துன்பமும் இறப்பும் தொடர்ந்து இடம்பெற்று வரும் வேளை அச்சண்டையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எப்பொழுதும் தோல்வியையே காண்கின்றன என்று நாட்டுக்கான திருப்பீடத் தூதுவர் கூறினார்.

ஸ்ரீலங்காவின் மனிதஉரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மனித உரிமைகள் கழகம் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து வத்திக்கான் வானொலிக்குப்பேட்டியளித்த பேராயர் பிரான்சுவா பக்கே போரிடும் குழுக்கள் மத்தியிலே ஒரு விதமான தளர்ச்சியைக் காணமுடிகின்றது என்று கூறினார். அரசுத் துருப்புக்களால் முற்றுகையிடப்பட்ட யாழ்ப்பாணப்பகுதியில் உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வந்தடைய அரசியல் தடங்கல் இல்லாத போதும் அப்பகுதி மக்கள் போதிய சத்துணவின்றி பெரிதும் துன்புறுகின்றனர் என்றும் பேராயர் கூறினார். அகதிகள் முகாமில் 5 லட்சத்திற்கு மேலான மக்கள் வாழ்ந்துவரும் வேளை கடந்த ஆண்டில் மட்டும் சண்டையினால், 4,000 பேர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவித்தார் பேராயர்.

## மேய்ப்புப்பணிக்கான தேசியமாநாடு

"தன்னைப் புதிப்பித்து பகிரும் திருச்சபையை நோக்கி......" எனும் கருப்பொருளை மேற்கொண்டு தேசிய மட்டத்தில் ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மேய்ப்புப் பணிக்கான தேசிய மாநாடொன்றை (National Pastoral Convention) வருகிற வருடம் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடாத்த இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை ஓர் சுற்றுநிருபத்தினூடாக அழைப்பு விடுத்துள்ளது என யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துத் தடைகள் காரணத்தால், ஆயர்கள் ஒருங்கிணைந்து விடுத்த சுற்றுநிருபம் யாழ் மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று தன் கவலையைத் தெரிவித்தார்.

இம்மாநாட்டிற்கான முன்கூட்டிய ஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன. இதற்கு எல்லா மறைவட்டங்களும் தங்கள் பங்களிப்பை பயனுள்ள விதத்தில் கொடுப்பதற்காக, ஓர் வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு, இவ்வருடம் 1993

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

## யாழ். ஆயரின் தவக்காலச் செய்தி



இத்தவக்காலத்தின் உண்மையான தபத் தன்மையை மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். தங்கள் தனிப்பட்ட வாழ்வின் மறைவான பாவங்களுக்காக மாத்திரமல்ல சமூக வாழ்விற்கெதிரான பகிரங்க குற்றங்களுக்காகவும் மக்கள் மனம் நொந்து மனமாற்றமடையவேண்டும். அதனால் மனிதனும்சமுதாயமும் அகத்திலும் புறத்திலும் முழுமையான தூய்மை பெறும்.

ஆகவே, பாவசங்கீர்த்தனமெனும் அருட்சாதனம் அடங்கிய பச்சாத்தாபச் சடங்குகள், சிலுவைப்பாதை, வேதாகமத் தியானங்கள் போன்ற பக்தி முயற்சிகள் மூலம் இறைவனை நாடிச்செல்லவும், அவரின் அன்பிலும் இரக்கத்திலும் நம்பிக்கை கொள்ளவும் மக்களைத் தூண்டி, இன்னல்கள் நிறைந்த இவ்வேளையில் அவர்களுக்குத் துணையாயிருக்க வேண்டுமெனத் தனது குருக்களைக் கேட்டுக்கொள்கின்றார்.

## மக்கள் முகாம்களில் ஆனந்தம்

இடம் பெயர்ந்த மக்களைப் பராமரிக்கு முகமாக புதிதாக அமைக்கப்பட்ட அரியாலைப் பங்குக்கு கடந்த வெள்ளி 12—02—93 அன்று யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மேற்கொண்ட விஜயம் அம்மக்களை அதிர்ச்சியிலும், ஆனந்தத்திலும் அமிழ்த்தியது.

பங்குத்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் உதவியுடன், தற்போது இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள இடங்களிலிருந்து குடிபெயர்ந்து தற்காலிகமாக அமைக்கப்பட்ட "அகதி முகாம்"களிலுள்ள மக்களின் துன்ப துயரங்களை நேரில் கண்டறிந்தார் ஆயர் அவர்கள்.

முன்னாள் குருமுதல்வர் அருட்திரு S. A. மைக்கல்சாமி o.m.i. அடிகளினால் தற்போது பரிபாலிக்கப்பட்டுவரும் அரியாலையிலுள்ள "அன்பகம்" எனும் அநாதைப்பிள்ளைகளின் இல்லத்தையும் ஆயர் தரிசித்து, சிறாரோடு கலகலப்பாய் உரையாடி அவர்களை மகிழ்வித்தார்.

## மதர் கிளேயரா காலமானார்

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நீண்ட காலமாக விஞ்ஞான, கணித ஆசிரியையாகவும், யாழ். திருக்குடும்பச் சபையின் தலைவியாகவும் பல ஆண்டுகள் பணி புரிந்த மதர் கிளேயரா மக்கோமிக் கடந்த செவ்வாய் 16—2—1993 இல் இங்கிலாந்தில் காலமானார்.

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த மதர் கிளேயரா, 1924 ஆம் ஆண்டு வேதபோதகப் பணிக்காக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து, யாழ் மண்ணில் 52 வருடங்களாக அரும்பெரும் பணியாற்றி, கல்வியுலகில் புகழ் பெற்ற இவர், 1972 ஆம் ஆண்டு தன் சொந்த நாட்டிற்கு திரும்ப வேண்டியிருந்தது.

இவரின் அளப்பெரிய சேவைகளையும் பசுமையான நினைவுகளையும் இவ்வின் பழைய மாணவிகள் பெரிதாகப் பாராட்டும் வேளையில், இவ்வின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவோமாக.

## கல்வி - ஒழுக்கம் - விளையாட்டு

புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையான மெய்வல்லுனர்ப் போட்டி கடந்த திங்கள் 8.2.92 அன்று, கல்லூரி அதிபர் அருட்திரு. A.I. பேனாட் அடிகளாரின் தலைமையில் தியோகுப்பிள்ளை விளையாட்டு அரங்கில் நடைபெறறது. பிரதம விருந்தினராக வடபிராந்திய அமலோற்பவ தியாகிகள் சபையின் முதல்வர் அருட்தந்தை P. P. பிலிப் o.m.i. அடிகளாரும், சிறப்பு விருந்தினராக யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடல் கல்வி) திரு. T. அருணகிரிராஜா அவர்களும் சமூகமளித்தனர்.

பிரதம விருந்தினர், P. P. பிலிப் o.m.i. அடிகளார் ஆற்றிய உரையில், மாணவர்களின் உருவாக்கலில், கல்வி, ஒழுக்கம், விளையாட்டு எனும் மும்முனை வளர்ச்சி இன்றியமையாதென்பதை வலியுறுத்தினார். கல்லூரியின் பாரம்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## புதிய தேசிய இயக்குநர்

கண்டி மறைவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. கிங்ஸ்லி குசான் காமினி சில்வா அடிகளார் பாப்பிறையின் மறை பரப்புச் சபைகளின் (PMAS) தேசிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளாரென மக்களுக்கு நற்செய்தி பரப்புவதற்கான பேராயம் அறிவித்திருக்கிறது.

அருட்தந்தை கிங்ஸ்லி 15.6.36இல் பிறந்தவர் தனது இறையியல் கல்வியை உரோமையில் முடித்து 21.12.63இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். கண்டி மறைவட்டத்தில் பலதரப்பட்ட பணிகளில் ஈடுபட்ட இவர், கற்றன், நுவரெலியா தலவாக்கலைப் பங்குகளில் பெரும் பணியாற்றினார்.

கொழும்பு துணை ஆயர் பேரருட்திரு. மல்கம் றஞ்சிற் ஆண்டகை அவர்கள் கடந்த 10 வருடங்களாக மறைபரப்புச் சபைகளின் தேசிய இயக்குநராக மிகவும் சிறந்த பணிகள் ஆற்றிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## நாலு கன்னியரின் அர்ப்பணம்

திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள், பிலமினா மத்தியாஸ், கில்டா சிங்கராயர், எவறிஸ்ரா பிரான்சிஸ், சோதி நாயகி அந்தோனிப்பிள்ளை ஆகியோர், பெப்ருவரி திங்கள் 11ஆம் நாள், யாழ். திருக்குடும்பக்கன்னியரின் தலைவியின் இல்ல ஆலயத்தில், வந்தனைக்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் நடந்த கூட்டுத் திருப்பலி வேளையில், தங்களது வாழ்வை நித்தியமாக இறைவனுக்கு அர்ப்பணமாக்கினர்.

தமிழ் பண்பாட்டிற்கமைய ஆயர் குருக்களை வரவேற்று, இவ் அருட்சகோதரிகள் இறை

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

# எம்கருத்து

## அர்த்தமுள்ள நோன்பு

தவக்காலம் தொடங்கிவிட்டது.

திருநீற்று புதனின் புனிதமிக்க வழிபாடும், அதைத் தொடர்ந்து வரும் நாற்பது நாட்களும் கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிமையில் பங்குகொள்வதற்கு நம்மைத் தயாரிக்க அழைப்புவிடுக்கின்றது.

தவக்காலம் என்று சொன்ன உடனே, நம்மவர்க்கு தபசு செய்ய வேண்டும், நோன்பு இருக்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறது.

தவநெறி என்பது ஏதோ ஒரு பொதுவிதி என்று எண்ணிக் கடைப்பிடிக்கும் வெளி ஆசாரமாக மட்டுமே அமைந்துவிடுதல் நல்லதல்ல. கட்டாயம் என்ற நிலையை நீக்கி, நாமே அறிந்து, உணர்ந்து, தெரிந்து தவத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற மனநிலை தான் அவசியம்.

நோன்பிருக்கும்போது உள்ளாந்தரத் தவநெறியை வெளியரங்க ஆசாரங்களால் உறுதிப்படுத்துகிறோம்.

நோன்பு என்பது உணவைக் குறைப்பது போன்ற வெளிச் செயல்களில் மட்டும் அடங்கியிருக்கவில்லை, உணவைக் குறைப்பது உள்ளார்ந்த தவநெறியின் ஓர் வெளி அடையாளம்.

இன்றைய உலகிலே போர், பஞ்சம், பிணி, பசி ஆகிய கொடுமைகளால் அவதியுறும் ஆயிரக்கணக்கான நம் சகோதர சகோதரிகளின் துன்பத்தில் நாமும் பங்கேற்க நோன்பு உதவுகின்றது. அன்பின்றி உள்ளத்திலும், உணவின்றி, உடையின்றி, இல்லிடமின்றி உடலிலும் துன்புறும் இவர்களின் துயரில் பகிர்தலே பெருந்தவமாகும். இவர்கள்பால் பசிதாகம் உள்ளவர்களே தவநெறியைக் கடைப்பிடிப்பவர்களாவர்.

ஒன்றுமில்லாதவர்களுடனும், குறைவாக உள்ளவர்களுடனும் எங்கள் உடமைகளைப் பகிர்ந்து கொள்ளும் தவ உணர்வைச் செயல்படுத்த இத்தவக்காலத்தில் வாய்ப்பு கிடைக்கிறது.

நமக்குத் தேவையில்லாதவை மட்டும் பிறருக்கு வழங்கிப் பெருமைப்படுவது புண்ணியமல்ல. மாறாக நமக்குத் தேவைப்படுவதையும் பதில் நன்றி பாராமல் கொடுப்பதில்தான் தவம் மேன்மையடையும்.

நமக்குத் திருப்தி அளிப்பதைச் செய்வதில் தவம் அடங்கவில்லை. இறைவனுக்கு உகந்தவற்றைச் செய்வதே தவம். மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் சூழ்நிலையைப் பேணி வளர்க்க இன்னல்களை நல் மனத்துடன் அநுபவிப்பது தவம், உலக இன்பத்திற்கும் உல்லாசத்திற்கும் மக்களைத் தூண்டும் நாகரீக அடிமைத்தனத்திலிருந்து தன்னையே விடுவித்துக் கொள்வது தவம். தவிர்க்கமுடியாத துன்பங்களை பொறுமையுடனும், பணிந்த மனதுடனும் ஏற்றுக்கொள்வது தவம். அடிப்படைத் தேவையற்று நிற்கும் சகோதர, சகோதரிகள் தங்கள் மனித மாண்பினையும் மேன்மையையும் அடைய உதவுவது தவம். நம் பாவநிலையை உணர்ந்து இறைவன் பக்கம் திரும்பத் தடையாயுள்ளதைத் தகர்த்தெறிய முயற்சி எடுப்பது தவம்.

## இதுவன்றோ... மேலான நோன்பு

“அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்துவிடு,
அழுத்தியிறுத்தும் நுகத்தடிகளை இறக்கு;
ஒடுக்கப்பட்டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய்,
சுமையானதை யெல்லாம் உடைத்தெறி;
பசித்திருப்பவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு,
ஏழைகளுக்கும் அந்நியருக்கும் உன்வீட்டில் தங்குவற்கு இடம் கொடு;
உன் இனத்தானை அவமதிக்காதே;
இதுவன்றோ நாம் விரும்பும் மேலான நோன்பு?”

(இசை. 58 : 6,7)

# புரியாத புதிர்களா?

அதிகாரம் 6 (சென்ற இதழ் தொடர்ச்சி)

## இறையியலில் திருமறைநூல் வகிக்கும் முக்கிய இடம்

24. புனித இறையியல் திருமரபோடுகூட, இறைவனின் எழுதப்பட்ட வார்த்தையைத் தன் நிலையான அடிப்படையாகக் கொண்டுள்ளது. விசுவாசத்தின் ஒளியால் கிறிஸ்துவின் மறைபொருளில் அடங்கிய உண்மைகள் அனைத்தையும் கூர்ந்தாராய்வதின் மூலம் இறையியல் அத்திருவார்த்தையால் மிக்க வலிமைபெற்று என்றும் இளமையுடன் இலங்குகிறது. திருமறை நூல்களில் இறைவனின் வார்த்தை அடங்கியுள்ளது. இறை ஏவுதவால் எழுதப்பட்டபடியால் அவை உண்மையாகவே இறைவனின் வார்த்தையாக உள்ளன. எனவே, திருமறை நூற்படிப்பு புனித இறையியலுக்கு உயிர்நாடியைப்போல் இருக்கவேண்டும். மேலும், திருமறை நூலின் சொல்லினின்றி திருவார்த்தைப் பணியும் நன்முறையில் ஊட்டம் பெற்றுப் புனிதமான முறையில் வளம்பெறுகிறது. இத் திருவார்த்தைப் பணி மேய்ப்பரின் மறையுரை, மறைக்கல்வி, மற்றெல்லாக் கிறிஸ்தவ அறிவுரைகள் ஆகியவற்றில் அடங்கியுள்ளது. இவ்வறிவுரைகளுள் திருவழிபாட்டு அருளுரை மிகச் சிறந்த இடம் பெறவேண்டும்.

**திருமறை நூலைப் படித்தல் வேண்டும்.**

25. எனவே, குருகுலத்தார் அனைவரும் சிறப்பாகக் கிறிஸ்துவின் குருக்களும், அருள்வாக்குப் பணியில் முறையுடன் பணியாற்றும் திருத்தொண்டர், மறைக்கல்வி ஆசிரியர் போன்ற பிறரும் திருமறை நூலை ஆர்வத்துடன் படித்துக் கவனத்துடன் ஆராய்ந்து அதில் ஊன்றியிருத்தல் இன்றியமையாதது. ஏனெனில், இறைவார்த்தையினது மிகுந்த செல்வங்களைத் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசிகளோடு, குறிப்பாகத் திருவழிபாட்டின் வழியே, பங்கிட்டுக் கொள்ளும் கடமையுடைய இவர்களுள் யாரும் “இறைவனது வார்த்தைக்கு உள்ளத்தால் செவிசாய்க்காது, வெளித் தோற்றத்திற்கு மட்டும் வீண் போதகராக” மாறிடல் தகாது. இதுபோலவே, இறை நூல்களை அடிக்கடி படிப்பதன் மூலம் “கிறிஸ்து இயேசுவை அறிதலாகிய ஒப்பற்ற செல்வத்தை” (பிலி. 3:8) பெற்றுக் கொள்ளும்படி கிறிஸ்தவ விசுவாசிகள் எல்லாரையும் சிறப்பாகத் துறவிகளையும் திருச்சங்கம் மிகவும் தனிப்பட்ட முறையில் தூண்டுகிறது. “திருமறை நூலை அறியாமல் இருப்பது கிறிஸ்துவை அறியாமலிருப்பதாகும்” ஆகவே, இறைமொழிகளை வழமையாய்க் கொண்டுள்ள திருவழிபாட்டின் மூலமோ, திருமறை நூலை இறைப்பற்றுடன் வாசிப்பதன் மூலமோ, திருச்சபையின் மேய்ப்பர்களுடைய ஒப்புதலோடும் ஆதரவோடும் இன்று எங்கும் பாராட்டுக்குரிய முறையில் பரவிவரும் பிற பொருத்தமான அமைப்புக்கள் மூற்றும் வழிவகைகள் மூலமோ, அனைவரும் விருப்புடன் திருமறைநூலை அண்டிச் செல்லவேண்டும். இறைவனுக்கும் மக்களுக்குமிடையே உரையாடல் நிகழ வேண்டுமென்றால், திருமறை நூலை வாசிப்பதோடு, செபமும் இணைந்து இருக்கவேண்டும் என்பதை மறத்தலாகாது. ஏனெனில், “நாம் செபிக்கும் பொழுது அவருடன் பேசுகிறோம்; இறைவனின் வார்த்தைகளைப் படிக்கும்பொழுது அவர் பேசுவதைக் கேட்கிறோம்”.

தேவையான, உண்மையிலே போதுமான விளக்கங்களைக் கொண்ட திருமறைநூல் மொழிபெயர்ப்புக்கள் மூலம் “அப்போஸ்தலர் போதனையைக் கொண்டுள்ள” திரு ஆயர்கள் இவ் இறைநூல்களைச் சிறப்பாக, புதிய ஏற்பாட்டை, அதிலும் குறிப்பாக, நற்செய்தி நூல்களைத் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள விசுவாசிகள் தகுந்த விதத்தில் பயன்படுத்தும் முறையில், அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். திருச்சபையின் மக்கள் பாதுகாப்புடனும் பயனுள்ள முறையிலும் திருமறை நூலைப் படித்துப் பழகி அவற்றின் உணர்வில் ஊறவேண்டுமென்பதே இதன் நோக்கம்.

மேலும் கிறிஸ்தவரல்லாதாரும் பயன்படுத்தும் வகையில் அவர்களுடைய சூழ்நிலைகளுக்கேற்பத் தழுவியமைக்கப்பட்ட திருமறைநூல் பதிப்புக்களைப் பொருத்தமான விளக்கக் குறிப்புக்களுடன் தயாரித்தல் நலம்; ஆன்ம மேய்ப்பர்களும் எல்லா நிலைகளிலுமுள்ள கிறிஸ்தவர்களும் பற்பல வகைகளில் இத்தகைய நூல்களை விவேகத்துடன் பரப்புவர்.

**முடிவுரை**

26. இவ்வாறு, இறைநூலை வாசிப்பதன்மூலம் ஆராய்வதன் மூலமும், “இறைவார்த்தை எங்கும் விரைந்து பரவி மகிமைபெறட்டும்” (2 தெச. 3 : 1). திருச்சபை

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்)

**அடுத்த இதழில்**

எதிர்பாருங்கள்

புதிய ஒரு தொடர்

# தவக்காலச் சிந்தனை

## இறை பிரசன்னத்தில் வாழ்வோம்

இம்மாதத்தில் நாம் தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம். தவக்காலம் என்றதும், பாலைவனம், சோதனை, துக்கம் என்பன நம் மனதிலே தோன்றும். திருப்பலி, சிலுவைப் பாதை, திருச் செபமாலை, ஒரு சந்தி, சுத்தபோசனம் நம் செயலில் துலங்கும். நல்லவைதான்; வரவேற்கவேண்டியவைதான். இவை மட்டும் நம் மீட்புக்குப் போதுமா?

இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்தனர். இறைபிரசன்னத்தைப் படிப்படியாக மறந்தனர். இறைவன் அவர்களோடு இருந்து ஆற்றிய அரும் பெரும் செயல்களையும் அவர்களால் உணரமுடியவில்லை. அவருக்கெதிராக முணுமுணுத்தனர். அவர் ஊழியன் மோயீசனுக்கு எதிராகவும் முறையிட்டனர். இவற்றை விவிலியத்தில் நாம் வாசிக்கிறோம்.

இயேசுக்கிறிஸ்து திருமுழுக்குப் பெற்று, நாற்பது நாள் பாலைவனத்தில் நோன்பிருந்தார். இறைபிரசன்னத்தில் வாழ்ந்தார். இறைசித்தத்தை ஏற்றார். அலகை எல்லாவகையாலும் அவரைச் சோதித்தது. சோதனைகளை எதிர்த்து வென்றார். பாலைவனவாழ்வு அவருக்கு ஆழ்ந்த ஓர் இறை அனுபவத்தைத் தந்தது எனலாம்.

நம் வாழ்வில் இன்றைய நிலை: தொழில்வாய்ப்பு இல்லை, பொருட்கள் தட்டுப்பாடு, விலையேற்றம், மருத்துவ வசதியில்லை, பயங்கரப் பயணங்கள். இவைதான் நம் பாலைவனவாழ்வு-சோதனைக் களம் - வேதனையின் காலம். ஆனால் நாம் இறை பிரசன்னத்தில் வாழ்கிறோமா? இறைதிட்டத்தை ஏற்றுச் செயற்படுகிறோமா? குறைகூறி முறையிட்டு நம்மையே நாம் நொந்து கொள்கிறோமா? சிந்திப்போம்! செயற்படுவோம்!!

அ. மருசலின்

யாழ். திருவழிபாட்டு நிலையம்

### மேய்ப்புப்பணி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யூலை மாதத்தில் அனுப்பி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கொடுக்கப்படும் பதில்களைக் கவனத்தில் எடுத்து, பல்வேறு ஆணைக் குழுக்களால் செயல்திட்டக் கோர்வைகள் ஆயத்தம் செய்து, கருத்துக்களைப் பெறுவதற்காக மீளவும் மறைவட்டங்களுக்கு 1993 டிசம்பர் மாதம் அனுப்பிவைக்கப்படும், எனவும் ஆயர் மேலும் தெரிவித்தார்.

### கல்வி-ஒழுக்கம்...


(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரியத்தில் இவைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி, இன்றைய இளஞ் சந்ததியினரை மேலும் ஊக்குவித்தார்.

நடைபெற்ற போட்டியில் மத்தியூஸ் இல்லம் முதல் இடத்தைப் பெற்றது.

இம்மாநாட்டைப் பற்றிய மேலதிக விபரங்கள் அடுத்த இதழில் கொடுக்க முயற்சி எடுக்கப்படும்.

# சிலுவையின் பாதையில் நற்செய்தி



I

1. ஆகையால் பிலாத்து அவர்களைத் திருப்திசெய்ய விரும்பி, இயேசுவைச் சாட்டைகளால் அடித்து, சிலுவையில் அறையும்படி கையளித்தான். (மாற்கு 15:15)

தீர்ப்பிடாதிர்கள், நீங்களும் தீர்ப்புக்குஉள்ளாகமாட்டீர்கள். கண்டனம் செய்யாதிர்கள்: கண்டனம் பெறமாட்டீர்கள். (லூக். 6 : 37)

II

2. இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு, எபிரேய மொழியிலே கொல்கொத்தா எனப்படும் இடத்திற்குச் சென்றார். (அரு. 19:17)

என்னைப் பின்செல்லவிரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும். (லூக். 9;23)

III

3. கோதுமைமணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால்தான் மிகுந்த பலனளிக்கும். (அரு. 12:24)

அப்படியே எழுந்து தன் தந்தையிடம் வந்தான். அவன் தொலைவில் வரும்போதே அவனுடைய தந்தை அவனைக் கண்டு மனமுருகி, ஓடிப்போய் அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டார். (லூக். 15:20)

IV

4. உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும். இதனால் பலருடைய உள்ளங்களினின்று எண்ணங்கள் வெளிப்படும். (லூக். 2:35)

மரியாளோ, "இதோ ஆண்டவருடைய அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்," என்றாள். (லூக். 1:38)

V

5. அவரைக் கூட்டிச்செல்லும் போது வயலிலிருந்து வந்து கொண்டிருந்த சீரேனே ஊரானாகிய சீமோன் என்பவனைப் பிடித்து அவன்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து அவருக்குப் பின்னால் அதைச் சுமந்துபோகச் செய்தனர். (லூக். 23:26)

ஒருவரொருவருடைய சுமைகளைத் தாங்கிக்கொள்ளுங்கள். (கலா. 5:2)

## சிலுவை கற்பிக்கும் பாடம்

### யூதர்களுக்கு இடறல்

யூதர்கள் சிலுவையில் கடவுளின் சாபத்தைக் கண்டனர். தண்டனையைக் கண்டனர். தீட்டுப்படுத்தும் சடலத்தைக் கண்டனர். சிலுவை மரத்தையும், சிலுவை மரணத்தையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே சிலுவை இடறலாக இருந்தது.

"இன்றிரவே என்னைக் குறித்து இடறல்படுவீர்கள்" (மத். 26 : 31)

"என்னைப் பற்றி இடறல் படாதவன் பேறுபெற்றவன்" (மத். 11 : 6)

### கிரேக்கர்களுக்கு மடமை

சிலுவைமரணம் அடிமைகளுக்கு அளிக்கப்படும் தண்டனை. சிலுவையின் மூலம் தான் மக்களுக்கு இரட்சணியம் என்று சொல்வது அறிவிலிகளின் பேச்சு. அவமானத்துக்குரிய கொலைத் தண்டனை எவ்வாறு மக்களைத் தண்டனையிலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிக்க முடியும்? எனவே சிலுவை கிரேக்கருக்கு ஒரு மடமையாகக் காட்சியளித்தது.

"அழிவுறுபவர்களுக்கு சிலுவை மடமை, மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை." (1 கொரி. 1 : 18)

### கிறிஸ்தவனுக்கு வல்லமை

★ கிறிஸ்தவனாகிய நான் சிலுவையைக் கண்டு ஓடுகின்றேனா?

★ புனிதர்களுக் கெல்லாம் சிலுவை ஞானமாக, வல்லமையாக அமைகின்றது.

★ "என் வாழ்நாளில் சிலுவையில்லாத நாள் வீணான நாள்," என்று புனித குழந்தை தெரேசம்மாள் சொல்வதை என்னால் சொல்ல முடியுமா?

## நீங்கா நினைவுகள்

*யாழ். மறைவட்டத்தின் குருமுதல்வராக 20 ஆண்டுகள் பணி புரிந்து இப்போ அன்பகத்தில் பணி புரியும்*

### அருட்திரு S. A. மைக்கல்சாமி O. M. I. அடிகளுடன் சில மணித்துளிகள்

அரியாலையின் திறந்த வயல் வெளிகளின் இடையில் உயர்ந்து நின்ற மேல் மாடிக் கட்டிடம்- அன்பகத்தினுள் நுளைகிறோம்.

இனிய காலைப் பொழுது. இதமான மெல்லிய காற்று. அருவி வெட்டி சாய்க்கப்பட்டிருக்கிறது. பாதுகாவலனிற்கு செவ்வி காண வந்திருக்கிறோம் என்ற போது வழமையான ஒரு சத்தமான சிரிப்பு.

● **உங்கள் நீண்ட பணி வாழ்வு பற்றி—......**

என் அழைப்பிற்கேற்ற முறையில் என் வாழ்வு நடந்திருக்கிறது. மன்னாரில் உதவிக் குருவாக ஆரம்பித்து அரிப்பிற்கு பங்குத்தந்தையாகப்போய் பல்வேறு இடங்களுக்குப் பிறகு கடைசியாக அன்பகத்தில் பிள்ளைகளுடன் இருக்கிறேன்.

● **எல்லாரும் ஆரம்ப காலத்தில்தான் பிள்ளைகளோடு இருப்பார்கள். நீங்கள் கடைசிக் காலத்தில் பிள்ளைகளோடு இருக்கிறீர்களே!**

முருங்கனிலும் கொஞ்சக்காலம் போடீங்கில் பிள்ளைகளோடு இருந்தேன்.

● **குரு முதல்வராக உங்கள் பணி பற்றி—**

1973ஆம் ஆண்டு மாசி மாதம் 1ஆம் திகதி ஆயர் என்னிடம் கேட்டார். எனது முதல்வர், உத்தரவு தந்தால் நான் எதற்கும் தயார் என்றேன். இப்போ 20 வருடங்கள் ஓடிவிட்டன. என்ன பணி என்னிடம் கேட்கப்பட்டதோ, எது தேவையோ அதை முழு மனதுடன் மனத்திருப்தியோடு செய்தேன். எனது குறைபாடுகள் மத்தியில் எனது கடமையைச் செய்தேன். எவ்வளவு தூரம் மற்றவர்களுக்கு பயனாக இருந்ததோ தெரியாது. எனக்கு மனத்திருப்தி.

● **நீங்கா நினைவாக ஏதும் உண்டா?**

குறிப்பாக அப்படி ஒன்றும் சொல்ல முடியாது. 77ஆம் ஆண்டு இனப்பிரச்சினையின் பின் அகதிகளை குடியமர்த்துவதும், அவர்களோடு நெருங்கி வாழ்வதும் நெடுங்கேணி, சேந்தாங்குளம்– வாழ்வகம் போன்ற இடங்களில் செய்த பணியும் மறக்க முடியாது.

● **எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மறைவட்ட பணியை விட்டு அகதிகளோடு அ.ம.தி. புரத்தில் பணி புரிய விரும்பினேன். முதல்வர் அன்பகத்தை தந்தார். என் கண் பார்வை குறைகிற படியால் நல்ல வெளிச்சமும், காற்றோட்டமும் உள்ள அன்பகம் நன்கு பிடித்துள்ளது. கொங்கிரசில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களோடு உழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டதிற் கொப்ப இங்கு இப்போ யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இருக்கிறேன். 42 பேர் இருக்கிறார்கள். 50 பேர் வரை அதிகரிக்கலாம்.

இனி நம்முடைய வாழ்வு முழுவதும் இந்தப்பிள்ளைகளோடு இவர்களுக்காக உழைக்கப் போகிறேன். இவர்களுக்காகத் தான் வாழப்போகிறேன்.

பேட்டி

**அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.**

### நாலு கன்னி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வனுக்குத் தம்மை தகனப்பலியாக்கும் உணர்வுடன் தீபங்களை ஏந்தியவண்ணம் ஆலயத்தினுள் புகுந்தனர். மறையுரையில் ஆயர் அவர்கள், போர்க்காலச் சூழ்நிலையில் துறவிகளின் வாழ்வு மிகவும் சவால் நிறைந்ததென்றும், ஆனால் தம் பணிக்கென அழைத்த ஆண்டவன் என்றும் நம்முடன் இருக்கின்றார் என்ற உணர்வு நாம் தடைகளைத் தாண்டி முன்னேற உதவுகின்றது என்றும் கூறி, அர்ப்பணத்திற்கு முன்வந்தவர்களை உறுதிப்படுத்தினார்.

இறைவனுக்கும், திருக்குடும்ப சபைக்கும் முற்றிலும் சொந்தமானவர்களின் என்பதன் அடையாளமாக மோதிரத்தை ஆயர் ஆசீர்வதிக்க, மாகாணத்தலைவி, சகோதரி மாறி யோசவ் அதை அணிவித்தார்.

### புரியாத ...

( 2.ஆம் பக்கத் தொடர்ச்சி ).

யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறை வெளிப்பாட்டுக் களஞ்சியம் மக்களின் இதயங்களை மேன்மேலும் நிரப்பி நிற்கட்டும். திருச்சபையின் வாழ்வு நற்கருணை மறைபொருளில் அடிக்கடி பங்கு பெறுவதால் வளர்ச்சியுறுவதுபோல், 'என்றென்றும் நிலைத்திருக்கும்' (இசை. 40 : 8; 1 இரா. 1: 23–25) இறைவனின் வார்த்தைக்கு அதிக மரியாதை செலுத்துவதன்மூலம் நாம் ஆன்ம வாழ்வில் புதிய தூண்டுதல் பெறுவோம் என்று நம்பலாம்.

### தவக்காலத்திற்கேற்ற சிறிய தவமுயற்சிகள்

- கோபத்தால் நெற்றியைச் சுருக்க நேரும்போது இலேசான புன்னகை புரிய முயலுங்கள்.
- உங்கள் வழியில் குறுக்கிடுபவர்களைப்பற்றி நல்லவைகளையே பேசுங்கள்.
- உங்களை வெறுத்து ஒதுக்குகின்றவர்களுக்கு இன்முகம் காட்டி அன்பு செலுத்துங்கள்.
- ஏற்றுக்கொள்ள முடியாத எந்த ஒரு வேலையிலும் சிறிது உற்சாகத்தைக் காட்டுங்கள்.
- உணவருந்தும்போது பசியால் வாடுபவர்களுக்காக உங்கள் மனதை இறைவன்பால் செலுத்துங்கள்.

## காவலன் கண்மணிகள்

| ஒளி: 7 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 4 | எம் வாழ்வின் வழி யேசு |

### ஐம்பது வினாக்கள்

21. திருப்பாலர் சபை எவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டது?
22. யாழ் மறை மாவட்ட மறை போதக சபை இயக்குநர் யார் ?
23. 03–2–93 இல் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் எக்கண்டத்திற்குத் தம் பயணத்தை மேற்கொண்டார் ?
24. அருட்திரு. M. பஸ்ரியன் அடிகள், தலைவன் இயேசுவின் பாதையில் குண்டுச்சாவை ஏற்ற ஆண்டு எது ?
25. திருத்தந்தையின் நற்செய்திப் பணிக்கு உதவும் சபைகள் இரண்டு தருக.
26. தூய ஆவியின் திருக்கொடைகள் எத்தனை?
27. 1871 இல் "என் குழந்தைகளே ! செபியுங்கள்; உங்கள் செபங்களைக் கடவுள் விரைவில் கேட்பார்" என்று பொன் மேன் கிராமத்தில் காட்சி கொடுத்துக் கூறியவர் யார் ?
28. அநேக ஆண்டுகளாகப் பல்லாயிரம் கிறிஸ்தவ மக்கள் உபயோகித்து பயன் பெறும் "மோட்ச பாதை" யின் முதலாம் பதிப்பிற்கு முகவுரை எழுதியவர் யார் ?
29. உலக சாரணியத்தின் தந்தை யார் ?
30. யாழ்ப்பாணத்தில் சாரணியம் எவ்வாண்டில் ஆரம்பிக்கப் பட்டது ?

கண்மணிகாள் !

அடுத்த சுடரில் 31 — 40 வினாக்கள் வரும்.

இறைமகன் இயேசுவின் அன்பின் சமாதானம் என்றும் எங்கும் பரவ செபிப்போமாக !

**உங்கள் அன்பின்**

**அன்பு விழி**

# செய்திச் சாறு

★ பசியால் துன்புறும் ஏழைமக்களுக்கு போதிய உணவு கிடைக்க வழி செய்யும் நோக்கில் இந்திய வேளாண்மை ஆய்வாளர்களும், வறியவர்களும் தங்கள் அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்றார் அன்னைதிரேசா.

★ லத்தீன் அமெரிக்காவின் பூர்வீகக் குடி மக்களுக்கும் ஏழைகளுக்கும் உதவும் நோக்கில் திருத்தந்தையால் கடந்த வருடம் உருவாக்கப்பட்ட நிறுவனம் அப்பகுதி 150 வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவ உள்ளதாகச் செயலாளர் அறிவித்தார்.

★ சோவியத் குடியரசான ஊர் பெக்கரனின் மொழியான ஊர்பெக்கில் முதன் முதலாக விவிலிய மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

★ மக்கள் இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கி சரியான தகவலைப் பரப்புவதன் மூலம் சமயத் தீவிரவாதத்திற்கெதிராய்ப் போராட வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளனர் அனைத்திந்திய கத்தோலிக்க பல்கலைக்கழக இயக்கத்தின் முன்னாள் அங்கத்தினர்கள்.

★ கடந்த ஆண்டில் காட்டுமிராண்டித்தனமும் அடிப்படையான மனித உரிமை மீறல்களும் அதிகமாக இடம்பெற்றுள்ளன என்று I. C. R. C. தலைவர் கூறினார்.

★ ஐ. நாவின் ஈராக்கிற்கு எதிரான பொருளாதாரத்தடைகள் தளர்த்தப்படல் வேண்டுமென்று ஐ. நாவின் திருப்பீடத்திற்கான நிரந்தரப் பார்வையாளர் கூறினார்.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் தலை வெட்டுண்டு மறைசாட்சியாக உயிர் துறந்த தூய அருளாந்தரின் 300ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் கத்தோலிக்கரின் விசுவாசத்தை வீரத்துவம் வாய்ந்த விசுவாசமாக உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

## இங்கிலாந்து அரசின் மனித உரிமை மீறல்கள்

ஐரோப்பிய மனித உரிமைகள் ஒப்பந்தத்தை இங்கிலாந்து நாடு தன் தேசிய சட்டத்திற்குள் புகுத்த வேண்டுமென அழைப்பு விடுத்தார் அங்கலிக்கன் பேராயர் ஜோர்ஜ் கரே. ஏனைய 26 நாடுகளைவிட இங்கிலாந்திற்கு எதிராகவே அதிக மனித உரிமைகள் குற்றங்கள் ஐரோப்பிய மனித உரிமைகள் மன்றத்திற்குவந்தன என்றார் அவர். ஐரோப்பிய மனித உரிமைகள் ஒப்பந்தத்தை இங்கிலாந்து அரசு தன் தேசியச் சட்டத்துடன் இணைத்துச் செயற்படுத்தத் தவறியுள்ளதால் பல வழக்குகள் ஐரோப்பிய நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு 6 வருடங்கள் காலதாமதமாகியுள்ளது என்று பேராயர் மேலும் கூறினார் இதுவரை 300 வழக்குகளில் இங்கிலாந்து அரசு ஐரோப்பிய மனித உரிமைகள் ஒப்பந்தத்தை மீறியுள்ளதாகக் குற்றம் கூறப்பட்டுள்ளது.

## கிறிஸ்தவர்களின் உணர்வை அரசு மதிக்கவேண்டும்

பிலிப்பைன்ஸ் அரசின் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் அந்நாட்டுக் குடும்பங்களை அழிவுக்குள்ளாக்கி வருவதாக குற்றம் காட்டினார் மணிலாப் பேராயர் கருதினால் சைமென் சின். கருக்கலைத்தல் மற்றும் கருத்தடைச் சாதனங்களை ஊக்குவிப்போருக்கு எதிராக கத்தோலிக்கர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென்ற அழைப்பை விடுத்த கருதினால் 2000ஆம் ஆண்டில் பிலிப்பைன்சில் மக்கள் பெருக்கவிகிதம் பூச்சியமாக இருக்க வேண்டும் என்பதன் தேவை என்ன என்ற கேள்வியையும் முன்வைத்தார். பிலிப்பைன்ஸ் வாழ்க்கை நிலைகள் துன்பம் நிறைந்ததாக உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும், ஆனால் கிறிஸ்தவர்களின் உணர்வை ஏன் அரசு மதிக்கத் தவறுகின்றது என்பது புரிந்து கொள்ள முடியாதது என கருதினால் சின் மறையுரையின் போதுமேலும் கூறினார்.

## மதர் பிரான்சிஸ் சேவியர் பிரான்சில் மரணமானார்

திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த மதர் பிரான்சிஸ் சேவியர் 3.2.93இல் பிரான்சு தேசத்தில் காலமானார். 1926ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இறைபணி புரிய வந்த இவர் பல ஆண்டுகளாக இளவாலையில் அனாதைச் சிறுவரைப் பராமரித்து வந்தார். இன்னும் கரம்பன், பண்டத்தரிப்பு, தலவாக்கலை என்னும் இடங்களிலும் பணி புரிந்தார். 1972ஆம் ஆண்டு வரை எமது சமுதாயத்திற்கு செய்த நன்மைகளுக்காக நன்றி கூறும் இவ்வேளையில், இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போமாக.

## சூர்க்கியின் விடுதலை உலகம் முழுவதும் விடுதலையின் அடையாளமாக இருக்கும்

கடந்த மூன்று ஆண்டுகளாக விட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் பர்ம எதிர்க்கட்சித் தலைவி ஆம்சான் சூர்க்கியின் விடுதலைக்கு தங்களோடு சேர்ந்து சர்வதேச சமுதாயம் விண்ணப்பிக்க வேண்டுமென்று நொபேல் அமைதி விருதுபெற்றவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். நொபேல் அமைதி விருதுபெற்ற குழுவின் சார்பாக கொஸ்தாரிக்காவின் முன்னாள் அரசுத்தலைவர் ஆங்கோஸ் அரியாஸ் பிரான்பிஸ் தாய்லாந்தின் வெளியுறவுத் துறையில் பேசுகையில் சூர்க்கியை விடுவிக்க தாமதம் ஏற்படுத்தும் வரை அவள் பாரத மக்களுக்கு தொடர்ச்சியான தூண்டுகோலாய் இருப்பாள் எனவும் கூறினார். சூர்க்கியின் விடுதலை உலகம் முழுவதும் விடுதலையின் அடையாளமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

பர்மாவிற்குள் நுளைய இக்குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதால் இக்குழு தாய்லாந்திலிருந்து ஜெனிவா சென்று மனித உரிமைகள் குறித்து ஐ. நா. அவையோடு உரையாடும்.

★ ஆயர் தலைமையில்

## அரசு எதிர்ப்புக் கூட்டம்

குடிமக்கள் அடையாள அட்டையில் மதசார்பு குறிப்பிடப்படல் வேண்டும் என்ற பாகிஸ்தான் அரசின் தீர்மானத்திற்கு எதிராக அண்மையில் அந்நாட்டின் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் இந்துக்களும் தங்கள் எதிர்ப்பை மீண்டும் ஒருமுறை வெளியிட்டனர். பாகிஸ்தானில் ைகதராபாத்தில் அப்பகுதி உதவி அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட இம் மூன்று மதத்தினரும் அரசின் இத்தீர்மானம் மனித உரிமை மீறல்கள் நடவடிக்கை மட்டுமல்ல, பாகிஸ்தான் அரசியலமைப்புக்கும் எதிரானது என அறிவித்தனர். இக்கூட்டத்திற்கு அப்பகுதியின் ஆயர் ஜோசெவ் கூட் தலைமை தாங்கினார். மனித உரிமைகளை மீறும் அரசின் இந் நடவடிக்கையை எதிர்த்துக் குரல் கொடுக்க அனைத்து மதத்தவரும் குறிப்பாகஇஸ்லாமியருடன் இணைந்து செயல்படவேண்டும் என அழைப்பு விடுத்தார் ஆயர்.

## அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடக்கப்பட வேண்டும்

ருவாண்டா நாட்டில் அரசுக்கும் புரட்சியாளர்களுக்குமிடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்க வேண்டுமென அந்நாட்டு ஆயர்கள் அழைப்பு விடுத்தனர். 9 ஆயர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் அரசுக்கும் புரட்சியாளர்களுக்குமிடையிலான மனந்திறந்த பேச்சுவார்த்தைகள் எவ்வித காலதாமதமின்றி இடம்பெறவேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தியுள்ளனர். அனைத்து மக்களுக்குமென வெளியிடப்பட்டுள்ள இச் செய்தி அந்நாட்டில் சண்டைகளற்ற அமைதிப் பகுதிகள் உருவாக்கப்பட வேண்டுமென்ற அழைப்பையும் முன்வைக்கின்றது. தேசிய ஒப்புரவுக்கும் ஜனநாயகப் பாதுகாப்பிற்கும் உழைக்க முன்வர வேண்டுமென்று ஆயர்களின் அறிக்கை விண்ணப்பிக்கின்றது.

### குருத்துவ நிறைவு தினம் "செபிப்போமாக"

மார்ச்: 18 – யோன் A. பிரான்சிஸ் o. m. i. – 1947
,, 26 – பிலிப் பொன்னையா – 1940
,, 26 – T. A. J. மதுரநாயகம் – 1940

## திட்டமிட்ட கொலைகள்

கடந்த இரு வாரங்களில் இஸ்ராயேல் இராணுவம் பாலஸ்தீனர்களுக்கு எதிரான திட்டமிட்ட கொலைகளை நிறைவேற்றியுள்ளதாக பாலஸ்தீன மனித உரிமைகள் குழு ஒன்று குற்றம் சாட்டியுள்ளது இஸ்ரேயரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதியில் 6 அரபு இனத்தவர் கொலை செய்யப்பட்டது பற்றி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இம்மனித உரிமைகள் கழகம் 3 கொலை நிகழ்ச்சிகளைப் பார்த்த சாட்சிகளின் கூற்று, அரசின் கூற்றிற்கு முரண்பாடாக இருப்பதாகத் தெரியப்பட்டது. டிசம்பர் 17ஆம் திகதி 415 பாலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து 44 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேயல் இராணுவத்தால் கொல்லப்பட்டனர் என்கிறது பாலஸ்தீன மனித உரிமைக் கழகம்.

## சீக்கிய தலைமைக் குருவின் உறுதி மொழி

பஞ்சாப்பில் சிறுபான்மையினராக இருக்கும் கிறிஸ்தவர்கள், சீக்கியத் தீவிரவாதிகளில் இருந்து காக்கப்படுவார்கள் என்ற உறுதிமொழியை வழங்கினார் சீக்கிய புதிய தலைமைக்குரு மஞ்சித் சிங். சீக்கிய மத அமைப்பான அகால்பைக்கின் புதிய தலைமைக் குருவாக பதவியேற்ற மஞ்சித்சிங் சிறுபான்மைச் சமுதாயத்தினர் அவர்கள் வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களை சீக்கிய மதம் ஒரு நாளும் சகித்துக் கொள்ளாது என்றார். பஞ்சாப்பில் கிறிஸ்தவக் கோவில்களும் கன்னியர்களும் தாக்கப்பட்டதைக் குறித்து தன் கண்டனத்தையும் வெளியிட்டார் புதிய சீக்கியத் தலைமைக் குரு.

## மனித உரிமை மீறலுக் கெதிராக கண்டனம்

சூடான் அரசு அந்நாட்டின் நாபா மலைப்குதியில் வாழ்வோரைக் கொல்வது உட்பட மனித உரிமைகளை கடுமையாக மீறி வருகின்றது என மனித உரிமைகள் கழகம் குறை கூறியுள்ளது. கியூபா மலைகளில் அப்பாவிக் குடிமக்கள் அண்மையில் சட்டத்திற்குப் புறம்பாக தூக்கிலிடப்பட்டதாக கூறுகின்றது. மேலும் திருத்தந்தையும் அவரின் அண்மை சூடானுக்கான திருப்பயணத்தில் அந்நாட்டின் மனித உரிமைகள் மீறல்களைக் கண்டித்தும் பேசியுள்ளார்.

புதிய உள்ளத்தையும்
புதிய மனத்தையும்
உங்களுக்கெனப்
படைத்துக் கொள்ளுங்கள்
(எசெக். 18 : 31)

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81